# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **116/ந/2018**

ஆணை நாள் : **29/06/2018**

**திரு S. வாஞ்சி,**
**மேட்டூர் அணை – 636 401.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர்,**
**மேட்டூர் நகராட்சி,** – **எதிர் மனுதாரர்**
**மேட்டூர்.**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, தூக்கணாம்பட்டி, கதவு எண். 15–199 முகவரியில் வசிக்கும் திரு S. வாஞ்சி அவர்களின் 21.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 116/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் மேட்டூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, தூக்கணாம்பட்டி, கதவு எண். 15–199 முகவரியில் வசிக்கும் திரு S. வாஞ்சி என்பவர் தான் மேட்டூர் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணியாற்றி 30.09.2013 அன்று பணி ஓய்வு பெற்றதாகவும், தான் நகராட்சியில் பணியாற்றிய பணிக் காலத்தை முழுமையாக கணக்கில் கொள்ளாமல் குறைந்த கால பணிக்காலத்தை கணக்கில் கொண்டு பணிக் கொடைத் தொகை வழங்கப்பட்டதை எதிர்த்து சேலம் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பாக 46/2013 எண்ணிட்ட பணிக்கொடை வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்ததாகவும், அவ்வழக்கில் தான் பணியாற்றிய 36 வருடங்களுக்கும் பணிக்கொடை பெறுவதற்கு உரிமையுண்டு எனத் தீர்மானித்து, பணிக்கொடைத் தொகையான ரூ. 1,52,392/–ஐ 30.09.2003 முதல் தொகை வழங்கும் நாள்வரை 10% தனிவட்டி கணக்கிட்டு ஆணை வழங்கப்படவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட ஆணை 12.08.2014 அன்று வெளியிடப்பட்டும், இதுநாள் வரையும் பணிக்கொடை தொகை வழங்கப்படாததை தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 12.08.2014 நாளிட்ட சேலம், தொழிலாளர் உதவி ஆணையரின் ஆணையினை எதிர்த்து, மேட்டூர் நகராட்சி ஆணையர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 6491/2016 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினையும் மற்றும் 5772 மற்றும் 5773 /2016 எண்களிட்ட நீதிப்பேராணை பல்வகை மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை மனு மற்றும் நீதிப்பேராணை பல்வகை மனுக்களில் 23.02.2016 அன்று கீழ்க்காணும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது :-

> "…….while holding the Writ Petition is not maintainable at this stage, liberty is granted to the petitioner to approach the Appellate Authority, after depositing the entire amount before the 1st Respondent, of the same is done, the Appellate Authority shall consider the Appeal petition and pass orders on merits and in accordance with the provisions of the Act."

3. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் அறிவுறுத்தியபடி சேலம் நகராட்சி ஆணையர் இன்றைய நாள்வரை சேலம், தொழிலாளர் உதவி ஆணையரின் ஆணையினை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பு பெற்று சுமார் 28 திங்கள்கள் முடிவடைந்து விட்டன. இந்நிலையில் நகராட்சி ஆணையர் தனது 19.06.2018 நாளிட்ட கடிதத்தில், மேட்டூர் நகராட்சியில் நிதி நிலைமையை பொறுத்தவரை ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் பிடித்த தொகைகள் வழங்க இயலாத நிலை உள்ளது என்றும், விரைவில் ஒரு மாத காலத்திற்குள் தொகை முழுவதும் கோவை உதவி ஆணையர் அவர்களுக்கு செலுத்தி மேல்முறையீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் 73 அகவையிதனைக் கடந்த மூத்த குடிமகன். அவரது கோரிக்கைக் குறித்த இந்நேர்வில் சேலம், தொழிலாளர் உதவி ஆணையர் தீர்ப்பு வழங்கி நான்கு ஆண்டுகள் முடியும் நிலையிலும் அவருக்கு வழங்கப்படவேண்டிய பணிக்கொடைத் தொகை வழங்குவது சம்பந்தப்பட்ட நேர்வில் உரிய காலத்தில் முடிவினை மேற்கொள்ளும் நடவடிக்கையினை தாமதப்படுத்துவது ஏற்புடையதல்ல. நிதி ஆதாரம் இல்லை எனக் காரணம் காட்டி ஓய்வு பெற்ற மூத்த குடிமகனுக்கு வழங்கப்படவேண்டிய பணிக்கொடைத் தொகை முழுவதும் வழங்கப்படாமல் காலம் நீட்டிப்பு செய்வதும் தவிர்க்கப்படவேண்டும். எனவே, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியவாறு இந்நேர்வு சம்பந்தப்பட்ட பணிக்கொடை கோரிக்கைக் குறித்த நேர்வினை மனிதாபிமான முறையில் அணுகி உரிய விதிகளின்படி விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர், சேலம் மாவட்டம்.

2. திரு S. வாஞ்சி,
கதவு எண். 15–199, கிழக்கு பிரதான சாலை,
தூக்கணாம்பட்டி,
மேட்டூர் அணை – 636 401.
சேலம் மாவட்டம்.

3. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
சேலம் மாவட்டம், சேலம்.

நகல் : நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி